[முற்பகல் 10·10]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, Madras Metropolitan Water Supply and Sewerage Board அதாவது, சென்னை குடிநீர் வழங்குதல் கழிவுநீர் அகற்றுதல் என்ற இலாக்கா என்னிடத்தில் கொடுக்கப்பட்டிருப்பதால் நான் அதைச் சொன்னேன்.

பழத் தோட்டங்கள்

*வினா எண். 54—திரு. துரை முருகன்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) Hill Development திட்டத்தில், பழ அபிவிருத்திக்கென தனியாக தொகை ஏதேனும் அரசு ஒதுக்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவை அந்தக் காரியத்திற்கே செலவிடப் பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:

(அ) ஆம்.

(ஆ) ஆம்.

திரு. துரை முருகன்: தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு? அந்தத் தொகையிலே இதுவரையிலே செலவிடப்பட்டது எவ்வளவு? இந்தத் திட்டத்தை எந்தெந்த இடங்களில் அமல்படுத்தியிருக்கிறார்கள் என்ற விவரங்களை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, 1977–78-இல் 51 ஹெக்டேரில் இத்திட்டம் செயல் படுத்தப் பட்டது, 1978-79-இல் 75 ஹெக்டேரில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1977-78-இல் 0.84 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, 0·87இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. 1978-79-இல் 0.96 இலட்சம் ரூபாய் இத்திட்ட வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டு அந்தக் காரியத்திற்காகத் தொகை செலவிடப்பட்டு வருகிறது.

கிராமப்பகுதிகளில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள்.

*வினா எண். 55—திரு. ஆர். மணிமாறன்: மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கிராமப் பகுதிகளில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் அமைத்திடும் திட்டம் கிராம வாரியத்திடம் இருக்கிறதா?